# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 30.12.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

"சஹாபாக்களின் ஜமாஅத் என்பது முன்பு வாழ்ந்து மறைந்தவர்கள் மட்டுமே என்று கருத வேண்டாம். மாறாக, சஹாபாக்களின் இன்னொரு பிரிவும் இருக்கின்றது. அவர்கள் தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். அவர்களும் சஹாபாக்கள் ஆவர். அவர்கள் அஹ்மதின் நிழலாகத் தோன்றியவருடன் இருப்பார்கள்."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இன்னொரு பெயர் அஹ்மது ஆகும். அவர்களின் நிழலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருக்கின்றார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ், *வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம்* என்று கூறியுள்ளான். சஹாபாக்களின் ஜமாஅத் முன்பு மட்டும் தான் இருந்தது என்று கருத வேண்டாம். மாறாக வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தும் சஹாபாக்களாகவே இருப்பார்கள்.

அதாவது, எந்த மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்துள்ளார்களோ, மேலும் அவர்களிடம் பைஅத் செய்துள்ளார்களோ, அவர்களது நட்பிலிருந்தும் பயனடைந்தார்களோ அப்படிப்பட்டவர்கள் பிறகு தங்களது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் அவர்கள் முன்னேறினர். இந்த மக்களும் சஹாபாக்கள் ஆவர் என்று மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**தொடர்ந்து அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

"இந்த வசனம் தொடர்பாக திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் இது மஸீஹ் மவ்வூது உடைய ஜமாஅத் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். *மின்ஹும்* என்ற சொல்லிலிருந்து அவர்களது ஆன்மீக கவனமும் அதிலிருந்து பலன் பெறுவதும் சஹாபாக்களைப் போன்றே இருக்கும்."

எந்த மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து அருள் பெற்றார்களோ நிச்சயமாக அவர்களுக்கு ஓர் உயர் தகுதி இருக்கின்றது. இவர்களில் ஒவ்வொருவரும் நமக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கின்றார்கள். அவர்களது நன்மை, தக்வா, தூய மாற்றங்கள் ஆகியவற்றின் தரம் நிச்சயமாக பின்பற்றுவதற்குத் தகுதி உடையவையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த சஹாபாக்களின் சில சம்பவங்கள் நம்மை வந்தடைந்திருப்பது நமது நற்பாக்கியமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த சஹாபாக்கள் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சபைகளில் நடைபெற்ற சம்பவங்களும் நிலைமைகளும் நம்மை வந்தடைந்துள்ளது. சஹாபாக்களின் அறிவிப்புகளை அவ்வப்போது நான் கூறி வருகின்றேன். இன்னும் இப்படிப்பட்ட சில சம்பவங்களை, அறிவிப்புகளை எடுத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தர்பிய்யத்தின் விளைவாகவும், அன்னார் தனது எஜமானரான காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமிருந்து பெற்ற ஒளியினாலும், அல்லாஹ் அவர்களது சஹாபாக்களில் எத்தகைய வியக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தினான் என்றால், அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு மகத்தான மகிமையைத் தன்னகத்தே

கொண்டவர்களாக ஆகி விட்டனர். அவர்கள் ஏழையாக இருந்தாலும் சரி, படிக்காதவராக இருந்தாலும் சரி அவர்கள் எல்லாரிடமும் வழக்கத்திற்கு மாற்றமான ஒரு நிறம் நமக்கு தென்படுகிறது. இறைவன் மீதுள்ள நம்பிக்கையை எடுத்துக் கொண்டால் அதில் ஒரு மகிமை அவர்களிடம் தென்படுகிறது. அவர்களது மார்க்கத் தொண்டிலுள்ள ஆர்வம் தன்னலமற்றதாகவும் வியக்கத்தக்க மகிமையைக் கொண்டதாகவும் இருக்கின்றது. அவர்களுக்கு திருக்குர்ஆனுடன் ஒரு ஆழமான தொடர்பு இருந்தது. அதன் மீது அன்பும் நேசமும் இருந்தது. பிறகு இறைவன் தானே அவர்களுக்கு குர்ஆனைக் கற்றுக் கொடுத்து, அதன் மூலமாக அவர்களது உள்ளத்திற்கும், மூளைக்கும் ஞானங்களை வழங்கியது ஆகியவை இறைவனோடு அவர்களுக்கு இருந்த தூய தொடர்பை அடையாளம் காட்டுகின்றது. இது அவர்களின் சிறப்பம்சமாகும்.

பிறகு மற்ற எல்லா விஷயங்களிலும் இறைவன் அவர்களுடன் பரிமாறிய விதத்தைப் பார்க்கும் போது தனது நெருக்கத்தைப் பெற்றவர்களுடன் தான் இறைவன் அவ்வாறு பரிமாறுகின்றான் என்பது தெரிய வருகிறது. பிறகு இந்த சஹாபாக்களின் சபைகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவர்களது பிரச்சனைகளுக்குரிய தீர்வை அவர்களுக்கு கற்றுக் கொடுப்பது, சுருக்கமான சொற்களில் கேள்விகளுக்கான பதிலை எப்படி கூறுவது என்பதை அவர்களுக்கு தெரிவிப்பது, பல்வேறு சொற்றொடர்கள் மூலமாக தன்னை எதிர்க்கின்றவரை ஆதாரங்கள் மூலமாகவும் தெளிவுகள் மூலமாகவும் எதிர்கொள்வது பற்றி அவர்களுக்கு பயிற்சி அளிப்பது ஆகியவை இருந்தன. 1400 வருடங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த உண்மை அடிமை மற்றும் உண்மைப் பேரன்பரின் காலத்தைப் பெற்ற அந்த மக்கள் மிகுந்த நற்பாக்கியம் பெற்றவர்கள் ஆவர். இப்போது ரிஜிஸ்டர் ரிவாயத்திலிருந்து சில அறிவிப்புகளை நான் எடுத்துக் கூறுகின்றேன்.

**ஹஸ்ரத் மவ்லவி சூஃபி அதா முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜிஹ்லம் வருகின்றார்கள் என்று நான் பத்திரிகையில் படித்தேன். ஆனால், எனக்கு ஜிஹ்லம் செல்வதற்கான அனுமதி கிடைக்காது என்ற நிலை இருந்தது. நான் மிகவும் நிம்மதியிழந்து இருந்தேன். வீட்டில் உள்ளவர்களிடம் நான் நாளை ஞாயிற்றுக்கிழமையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜிஹ்லம் வந்துள்ளார்கள். நான் அங்கு செல்கின்றேன். எவர்களிடமும் நீங்கள் இதுபற்றி கூற வேண்டாம் என்று கூறினார்கள். இரயிலுக்கான நேரம் மிகவும் குறைவாக இருந்தது. மூன்று மைல் தூரத்தில் இரயில் நிலையம் இருந்தது. நடந்து செல்லும் வழி மலைப்பிரதேசமாக இருந்தது. இரவு நேரமாகவும் இருந்தது. பகல் நேரத்தில் கூட மக்கள் இந்த வழியாகச் செல்வது கடினமாக இருந்தது. ஆனால் அவரிடம் ஒரு துடிப்பும் ஆர்வமும் இருந்தது. இரவு நேரத்தில் அவர்கள் செல்ல ஆரம்பித்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இறைவன் மீது நம்பிக்கை வைத்தேன். பிறகு செல்ல ஆரம்பித்தேன். தற்செயலாக ஒரு விளக்கு முழு வழியிலும் எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்தது. ஒருவேளை வேறொரு நபரும் எங்கோ போய்க் கொண்டிருக்கின்றார் என்று எண்ணியவாறு இறைவா! இறைவா! என்று மலைகள் நிறைந்த அந்தப் பாதையை ஓடியவாறு நான் கடந்து சென்றேன்.

அதாவது அவர் கூறுகின்றார்: "ஒரு விளக்கு முன்னால் சென்று கொண்டிருந்தது. ஒருவேளை ஒரு மனிதர் முன்னே சென்றிருக்கலாம்". இவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு சென்றார். மஹ்தி மஸீஹை சந்திப்பதற்காக சென்று கொண்டிருந்தார். வியக்கத்தக்க வகையில் அல்லாஹ் இந்த ஏற்பாட்டை செய்தான். அவருக்கு முன்னால் ஒரு விளக்கு சென்று கொண்டிருந்தது. அவர்கள் ஓடியவாறு அந்த பாதையைக் கடந்து சென்று விட்டார்கள்.

அவர் கூறுகின்றார்: "நான் இரயில் நிலையத்தை அடைந்ததும் இரயில் தயாராக இருந்தது. டிக்கெட் வாங்கினேன். ஜிஹ்லம் சென்றேன். ஹுஸூர் அவர்களைச் சந்திக்கும் நற்பேற்றைப் பெற்றேன். அங்கு சேட் அஹ்மது தீன் என்ற ஒருவர் இருந்தார். நீங்கள் அந்தக் கவிதையைப் பாடினால் இன்பமாக இருக்கும் என்று

அவர் என்னிடம் கூறினார்.'' அதாவது இவர்கள் பைஅத் செய்த சமயத்தில் ஒரு கவிதையை எழுதியிருந்தார்கள். அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் துஆவிக்காக விண்ணப்பிக்கும் சொற்களைக் கொண்டதாக இருந்தது. பைஅத்தின் கடிதத்துடன் அவர் அக்கவிதையை அனுப்பி வைத்திருந்தார். ஒரு நீண்ட கவிதையாகும். நீங்கள் அந்தக் கவிதையைப் பாடுங்கள் என்று அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் சாஹிப் அனுமதி தந்தால் நான் அதைப் பாடுவேன் என்று இவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் சாஹிப் அனுமதி வழங்கினார்கள்.

கூறுகின்றார்கள்: நான் உடனடியாக எழுந்து நின்றேன். மிகுந்த உணர்வுடன் அந்தக் கவிதையைப் பாடினேன். அந்த கவிதை அங்கு வந்தவர்களிடம் எத்தகு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர்களில் யாரோ ஒருவர் இந்த கவிதையை எனக்கு தாருங்கள் என்று கேட்டார். அதற்கு நான் அது எனக்கு மனனமாக தெரியும். அதைத்தான் பாடினேன் என்றேன். கவிதையைக் கேட்ட பிறகு ஹுஸுர் எனக்கு ஒரு வஸீஃபாவைக் கூறினார்கள். அது எனது கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டிருந்த அதே வஸீஃபாவாகும். பைஅத்திற்கான கடிதத்தையும் இந்தக் கவிதையையும் அவர் எழுதியதுடன் கடிதத்தில் ஹுஸுர் எனக்கு ஏதாவது வஸீஃபா கூறுங்கள். அதை நான் செய்து வருவேன் என்றும் அவர் கூறியிருந்தார். ஹுஸுர், அவரிடம் வஸீஃபாவைக் கூறியதும் நான் ஹஸ்ரத் சாஹிபிடம் வாய்மொழியாகக் கேட்ட பிறகும் அவர்கள் கூறிய அந்த வஸீஃபா கடிதத்தில் குறிப்பிட்ட அதே வஸீஃபாவாக இருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹுஸுர் அவர்களின் நினைவாற்றல் எவ்வளவு கூர்மையானது என்பதை நினைத்து நான் வியப்படைந்தேன். அவர்கள் கடிதத்தில் எந்த வஸீஃபாவை எழுதும்படி கூறியிருந்தார்களோ, அதைத்தான் வாய்மொழியாகவும் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருக்கு எழுதியிருந்த வஸீஃபா இதுவாகும்.

"நீங்கள் வஸீஃபா வேண்டும் என்று கேட்டுள்ளீர்கள். வேறு எந்த வஸீஃபாவும் தேவையில்லை. அதிகமாக தரூது ஓதுங்கள். அதிகமாக இஸ்திக்ஃபார் செய்து வாருங்கள். திருக்குர்ஆனை ஆழமானப் பார்வையுடன் படித்து வருவதுடன் முறையாக அதை ஓதி வாருங்கள். இதுதான் அந்த வஸீஃபா ஆகும். எல்லா வெற்றிகளின் இரகசியமும் இதில்தான் உள்ளது'' என்று கூறினார்கள்.

பலர் எனக்கு கடிதம் எழுதுகின்றார்கள். பொதுவாக நானும் இந்த வழிகாட்டலின் அடிப்படையில் அவர்களுக்கு இவற்றைத் தான் கூறி வருகின்றேன். ஓரிடத்தில் யாருக்கோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லா ஹவ்ல் ஓதி வாருங்கள் என்றும் எழுதியுள்ளார்கள். லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யுல் அளீம். இந்த துஆவையும் ஓத வேண்டும்.

இவையே மனிதனுக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகிறது.

சக்னா ஜம்முவைச் சேர்ந்த கலீஃபா நூருத்தீன் சாஹிபின் ஓர் அறிவிப்பு உள்ளது. இது முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் பெயர் என்று யாரும் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வேறொரு சஹாபி ஆவார். அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு முறை ஜம்முவிலிருந்து நடந்தவாறு குஜராத் வழியாக காஷ்மீர் சென்றேன். வழியில் குஜராத் அருகில் ஒரு காட்டில் தொழுதவாறு, *அல்லாஹு ம்ம இன்னி அவூதுபிக்க மினல் ஹம்மி வல் ஹுஸ்னி* என்ற சொற்கள் வரும் துஆவை மிகுந்த உருக்கத்துடன் ஓதினேன். அதற்குப் பிறகு அல்லாஹ் எனது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் வகையிலுள்ள ஏற்பாட்டை எனக்கு செய்து விட்டான். குறிப்பிட்ட தொழில் எதுவும் செய்யாமலேயே மறைவான இடத்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்கள் என்னிடம் வந்தன.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு அவர்களது தூய்மைப்படுத்துகின்ற ஆற்றலின் விளைவாக இத்தகைய மாற்றங்கள் இந்த மக்களிடம் உருவானது.

இவர்கள் துஆக்கள் செய்தனர். அல்லாஹ் இவர்களது துஆக்கள் வியக்கத்தக்க வகையில் ஏற்றுக் கொள்ளப்படுவதை இவர்களுக்குக் காட்டினான். அவர்கள் கூறுகின்றார்கள்: இந்நிலையில் நான் ஒருபோதும் எவரிடமும் எதையும் கேட்டதில்லை. எனக்கு எப்போது துக்கமும் துயரமும் ஏற்பட்டாலும் நான் துஆ செய்வேன்.

அதன் விளைவாக அல்லாஹ்வின் அருளால் ஒருபோதும் எனக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதேயில்லை என்று இவர்கள் கூறுகின்றார்கள்.

பிறகு மியான் ஸராபத் அஹ்மது சாஹிப் தனது தந்தையான மர்ஹூம் மவ்லவி மியான் ஜலாலுத்தீன் சாஹிப் அவர்களது நிலைமைகளைப் பற்றி எடுத்துக் கூறியவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்:

மவ்லவி சாஹிப் இறைவன் மீது தவக்குல் வைக்கின்ற மனிதராக இருந்தார்கள். நமக்கு எது தேவைப்படுமோ அதை இறைவன் தானாகவே வழங்கி விடுவான் என்று கூறுவார்கள். இது வியக்கத்தக்க தவக்குல் ஆகும். நாம் எவரிடமாவது கூற வேண்டும் என்ற தேவை நமக்கு ஏற்பட்டதில்லை என்று கூறுவார்கள்.

அவர்கள் கூறினார்கள்: என்னை 1918 ம் வருடத்தில் அல்லது 1919 ல் அஞ்சுமன் என்னை பணியில் அமர்த்தியது. எனக்கு 20 அல்லது 25 ரூபாய் அலோவன்ஸாக அஞ்சுமன் நிர்ணயித்திருந்தது. அந்த நாட்களில் நெல்லின் விலை மிக அதிகமாக இருந்தது. அதாவது கோதுமை போன்றவற்றின் விலையும் மிகவும் உயர்ந்திருந்தது. நாஸிர் பைத்துல் மால் ஆக இருந்த முன்ஸி ஃபர்ஸன்த் அலி கான் சாஹிப் அவர்கள் ஃபிரோஸ்பூரில் இருந்தார்கள். தந்தையார் அவர்களின் கீழ் பணிபுரிந்து வந்தார்கள். ஒரு நாள் ஃபர்ஸன்த் அலி கான் சாஹிப் அவர்கள் மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிப் அவர்களைப் பார்த்து உங்களுக்கு சம்பளம் கிடைக்கின்றது. அதனால்தான் நீங்கள் மிகுதியாக உழைத்தவாறு வேலை செய்கின்றீர்கள் என்று கூறினார்கள்.

தந்தையார் இவ்வாறு எங்களிடம் கூறினார்கள்: அவரது இந்த பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை. நான் அவரிடம், நான் என்ன உங்களிடம் இதற்காக சம்பளம் கேட்டேனா? என்று கேட்டேன். நான் என்னை இதற்காக அர்ப்பணித்துள்ளேன். மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காக நானே முன் வந்தேன். ஜமாஅத் தானாகவே எனக்குரிய அலோவன்ஸை நிர்ணயம் செய்தது. நான் கேட்கவில்லையே! நான் எந்தக் கோரிக்கையையும் வைக்கவில்லை என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் நாஸிர் பைத்துல் மால் இடம், இனி நான் இந்த அலோவன்ஸை பெற்றுக் கொள்ளமாட்டேன் என்று கூறி விட்டார்கள். நாஸிர் பைத்துல் மால் ஆக இருந்த கான் சாஹிப், முன்பு போலவே பணிகளைச் செய்வீர்களா? அல்லது உங்களது விருப்பத்திற்கேற்ப செய்வீர்களா? என்று கேட்டார்கள். அதாவது நீங்கள் இனி சம்பளம் வாங்க மாட்டீர்கள். ஆனால் இதற்கு முன் உழைத்து பணி செய்தது போல், பணிகளைச் சரியாகச் செய்வீர்களா? மாட்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிப் அவர்கள் முன்பை விட அதிகமாக மிகுதியாக உழைத்தவாறு முழுமையாகக் கீழ்ப்படிந்து நடந்தவாறு பணிகளைச் செய்வேன் என்று அவர்களிடம் கூறினார்கள். முன்பை விட அதிகமாக உழைக்கவும் செய்வேன். முழுமையாகக் கட்டுப்பட்டு நடந்தவாறு பணிகளைச் செய்வேன் என்று அவர்கள் கூறினார்கள். பணி செய்தல், கட்டுப்பட்டு நடத்தல் ஆகியவற்றிற்கு சம்பளத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. நான் எனது பணிகளைச் செய்து கொண்டே செல்வேன் என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவ்வாறு நான் கூறிவிட்டு நான் எனது தப்லீக் சுற்றுப் பயணத்தில் சென்று விட்டேன். நடந்து சென்று கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் சவாரிகள் இருந்ததில்லை. அந்தக் காலத்தில் பொதுவாக முபல்லிக்மார்கள் தப்லீக் சுற்றுப் பயணங்களில் செல்லும் போது நடந்து தான் செல்வார்கள். நடந்து செல்லும் போது எனக்கு நமக்கு கிடைத்த அலோவன்ஸ் மூலமாக ஓரளவு நமது தேவைகள் நிறைவேறின. இப்போது நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. கோதுமை போன்றவற்றின் விலை உயர்ந்து விட்டது. இப்போது

எப்படி இதை சமாளிப்பது என்ற எண்ணங்கள் வர ஆரம்பித்தது. இந்த எண்ணங்கள் வந்த பிறகு அல்லாஹ் இவர்களிடம் எவ்வாறு பரிமாறினான் என்பதைப் பாருங்கள்.

கூறுகின்றார்கள்: எனது தந்தையார் கூறினார்கள். நான் இதே எண்ணங்களுடன் சென்று கொண்டிருந்தேன். திடீரென்று அச்சத்தைத் தரக்கூடிய கர்ஜிக்கின்ற ஒரு குரல் கேட்டது. அதனால் எனது உள்ளம் நடுங்கி விட்டது. மிகவும் வலுவான சப்தத்துடன் இந்த தூதுச் செய்தி அதில் கூறப்பட்டது.

இவ்வளவு காலமாக உனக்கு யாராவது சம்பளம் கொடுத்து வந்தார்களா? சம்பளம் மூலம் தான் நீங்கள் வளர்ந்து இப்போதுள்ள நிலையை அடைந்தீர்களா? என்று அந்தக் குரலில் கேட்கப்பட்டது.

கூறுகின்றார்கள்: இந்த சப்தமும், இந்தக் கர்ஜனையும் எனது காதுகளில் கேட்டதுமே எனது எல்லா துக்கங்களும், துயரங்களும் விலகி விட்டன. நான் மிகுந்த பணிவுடன் இறைவா! எனக்கு இவர்களது சம்பளத்தின் என்ன தேவை உள்ளது? உனக்கு எதிரில் இவற்றிற்கு என்ன தகுதி இருக்கின்றது? என்று நான் கூறினேன். இதற்குப் பிறகு முன்பை விட சிறந்த முறையில் எனது காலம் கழிந்தது.

கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு அல்லாஹ் எனக்கு எப்படி ஆதரவாக இருந்தான் என்றால் எனது நிலைமைகள் முன்பை விட சிறந்ததாக ஆகி விட்டது.

**மவ்லவி சாஹிப் இவ்வாறு கூறி வந்தார்கள்:**

கான் சாஹிப் எனது பழைய நண்பராவார்கள். இந்த சொற்கள் நகைச்சுவையாக மவ்லவி சாஹிபின் நாவிலிருந்து வந்து விட்டது.

கான் சாஹிப் எனது பழைய நண்பராவார். அவர்கள் பிறகு எனது சம்பளம் என்ற ஷிர்க்கை உடைப்பதற்கு அவர்கள் காரணமாக அமைந்தார்கள் என்று மவ்லவி சாஹிப் கூறினார்கள். இவ்வாறு ஷிர்க் என்னிடமிருந்து வெளியேறி விட்டது என்று அவர்கள் கூறினார்கள்.

**மர்ஹூம் மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிபின் நிலைமைகளை விளக்கியவாறு அவர்களது மகன் தொடர்ந்து எழுதுகின்றார்கள்:**

மவ்லவி சாஹிப் தமது கனவில் மவ்லவி நூருத்தீன் சாஹிப் சூதாட்டம் விளையாடுவதாகப் பார்த்தார்கள். மவ்லவி ஜலாலுத்தீன் சாஹிப் அவர்கள் இந்தக் கனவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினார்கள். இதைக் கேட்டு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

மவ்லவி சாஹிப்! முதல் கலீஃபத்துல் மஸீஹான மவ்லானா நூருத்தீன் சாஹிப் அவர்கள் சூதாடியுள்ளார்கள். ஆனால் இறைவனுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

அதாவது இவர்களும் சூதாட்டத்தில் கலந்து கொள்பவர்கள் போன்றே ஆவார்கள். சூதாட்டத்தில் கலந்து கொள்பவர்கள் தங்களது அனைத்துப் பொருள்களையும் அடமானமாக வைத்து விடுகின்றனர். தங்களிடம் எதையும் அவர்கள் வைப்பதில்லை.

இவ்வாறே மவ்லவி சாஹிபும் தன்னிடமுள்ள அனைத்தையும் இறைவனது வழியில் அர்ப்பணித்து விட்டார்கள்.

இந்த வியாபாரத்தைத்தான் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் செய்திருந்தார்கள். உலகவாதிகள் உலக பலன்களுக்காக சூதாட்டத்தில் பைசாக்களை வைத்து விளையாடுவார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது உலகம், மறுமை ஆகிய இரண்டையும் சரி செய்து கொள்வதற்காக தங்களது பைசாவை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்தார்கள். பிறகு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒவ்வொரு உலகத் தேவையையும் அல்லாஹ் எவ்வாறு நிறைவேற்றினான்? என்பதை

அவர்களது வாழ்வில் நடந்த எண்ணற்ற சம்பவங்களில் நாம் பார்க்க முடியும். பிறகு மார்க்கத்தில் அவர்களுக்கு எத்தகைய உயர்வான தகுதி கிடைத்தது என்பது எல்லாருக்கும் தெரியும்.

**மியான் வலி முஹம்மது சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் சூஃபி குலாம் முஹம்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

1912 ஆம் ஆண்டு நான் பஞ்சாப் பல்கலைக்கழகத்திலிருந்து B.A. விற்கான தேர்வினை எழுதி தேர்ச்சி பெற்றேன். இதற்குப் பிறகு நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம், திருக்குர்ஆனை மனனம் செய்யவா? அல்லது M.A. விற்கான தேர்வை எழுதவா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் திருக்குர்ஆனை மனனம் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு நான் ஆறு மாதங்களில் திருக்குர்ஆனை மனனம் செய்தேன். நான் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் இதுபற்றி கூறியதும் அவர்கள் நன்றி ஸஜ்தா செய்தார்கள்.

இதுதான் சஹாபாக்களுக்குக் கிடைத்த தர்பிய்யத் ஆகும். இதுதான் அவர்களது கட்டுப்படுதலாகும். திருக்குர்ஆன் மீது அளவற்ற அன்பு இருந்ததால்தான் உலகத்தை விட்டு விட்டு முதலில் திருக்குர்ஆனை அவர்கள் மனனம் செய்தார்கள். அதற்குப் பிறகுதான் படிப்பைத் தொடர்ந்தார்கள்.

**ஹஸ்ரத் ஸய்யது அஹ்தருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

எவர் மீது ஒருவருக்கு அன்பு உள்ளதோ அவரது உள்ளம் தனது அன்பரின் நினைவால் அவரைப் பற்றி பேசுவதற்காகத் துடிக்கும். ரஹ்மானான இறைவனால் அனுப்பப்பட்டவர் நபிமார்களின் தலைவர், நமது எஜமானர், நமது அன்பிற்குரியவர், ஹஸ்ரத் நபி கரீம் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களது முழுமையான பிரதிபிம்பமான, அவர்களது அழகிய தோற்றமான ஸெய்யதுனா வ நபிய்யுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்ற மகத்தான மனிதரைப் பற்றி கூறுவதற்கு எனக்கு துடிப்பு இல்லாமல் எப்படி இருக்கும்? அவர்களை நினைவு கூர்வதில் எனக்கு இன்பம் கிடைக்காமல் எப்படி இருக்க முடியும்?

ஆனால், எனக்கிருந்த அச்சம் என்னவென்றால் இந்த எளியவனின் நினைவாற்றல் பலவீனமானதாக இருந்தது. ஹுஸூர் (அலை) அவர்களின் தூய நட்பிற்குப் பிறகு ஒரு நீண்ட காலம் கழிந்து விட்டது. அதாவது 1902 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து 1903 ஆம் ஆண்டின் இறுதி வரை ஏறக்குறைய ஒரு ஆண்டு எனக்கு அவர்களுடன் இருப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. அப்போது எனது வயது 24 ஆக இருந்தது. அந்த நாட்களில் நானும் எனது மாமா மர்ஹூம் மவ்லவி ஸெய்யது அஹ்மது ஹுஸைன் சாஹிப் ஆகிய இருவர் மட்டுமே கட்டக்கில் இருந்து வந்திருந்த, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தாளிகளாக இருந்தோம். இவர்கள் கட்டாக்கைச் சார்ந்தவர்களாவர். அவர்கள் கூறுகின்றார்கள்:

எங்கள் இருவருக்கும் பல மாதங்களாக சோறு கிடைத்துக் கொண்டிருந்தது. இது சோறு சாப்பிடுகின்ற பகுதியாக இருந்தது. இது ஒரிஸ்ஸா மாநிலத்தைச் சேர்ந்த இடமாகும். அவர்களுக்கு நாள்தோறும் சோறு வந்து கொண்டிருந்தது. ஹுஸூர் (அலை) மியான் நஜ்முத்தீன் அவர்களிடம் நல்ல முறையில் விருந்தோம்பல் செய்வதற்கு வலியுறுத்திக் கூறி வந்தார்கள். இதனை மர்ஹூம் நஜ்முத்தீன் சாஹிப் எங்கள் இருவரிடமும் இவ்வாறு கூறியிருந்தார்கள்.

உங்கள் இருவர் தொடர்பாகவும் ஹஸ்ரத் ஜி மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

**பிறகு இதே ஸெய்யது அக்தருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் மாணவனாக இருந்தேன். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது தர்ஸ்களில் நான் கலந்து கொண்டேன். அவர்கள் இந்த எளியவனிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். *ரப்பிர்ஹம் ஹுமா கமா ரப்ப யானி ஸகீரா*. எனது தந்யையார் (ரலி) அவர்களும் எனது தாயாரும் நான்

வீட்டிற்கு திரும்ப வேண்டும் என்ற கட்டளை பிறப்பித்தார்கள். இந்த எளியவனுக்கு வருவதற்கும் போவதற்கும் உள்ள செலவு அதிகமாக இருப்பதால் இனி தாருல் அமானுக்கு நான் திரும்புவது கடினமாகும் என்ற எனது தகவலைக் கேட்ட ஹுஸூர் (ரலி) அவர்கள், நீங்கள் இங்கு வரும்போது எனக்கு எழுதுங்கள். நான் பயணத்திற்கான செலவை அனுப்பி விடுவேன் என்று கூறினார்கள். அதாவது பெற்றோர்கள் என்னை காதியானிலிருந்து வீட்டிற்கு திரும்பும்படி கட்டளையிட்டதும், நான் வீட்டிற்கு திரும்பும் போது முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு, 'வந்து போவதற்கான செலவு அதிகமாக இருக்கும். எனவே, இப்போது எனக்கு காதியான் வருவது கடினமானதாக ஆகிவிட்டது' என்று தகவல் அனுப்பினேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நீங்கள் வரும்போது என்னிடம் கூறுங்கள். நான் உங்களுக்கு பயணச் செலவு அனுப்பி வைத்து விடுவேன் என்று கூறினார்கள்.

இந்த எளியவன் வீட்டிற்கு திரும்பி வருவதற்கான அந்த சமயம் நெருங்கி வந்த போது அந்த நாட்களில் சிறிய பள்ளிவாசலான மஸ்ஜிது முபாரக்கின் மேல் பகுதியில் தொழுகை நடந்தது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) மேற்குப் பக்கமாக வந்து பிறகு தனது அருளுக்குரிய கைகளை எனது தோளின் மீது வைத்து மிகவும் அன்புடன் மியான் அக்தருத்தீனே! நீ பல ஆசிரியர்களிடமிருந்தும் திருக்குர்ஆனைக் கற்று வருவதாக நான் கேள்விப்பட்டேன்.

*வத்தகுல்லாஹா வ யுஅல்லிமுகுமுல்லாஹ்* என்று அவர்கள் கூறினார்கள். அதாவது அல்லாஹ்வின் தக்வாவை மேற்கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுக்கு கற்றுத் தருவான் என்று ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

சஹாபாக்களிடம் திருக்குர்ஆனைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. திருக்குர்ஆன் ஓதுவதற்குரிய அடிப்படை நிபந்தனை இவை ஆகும். இளைஞராக இருந்த போது இவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் குர்ஆன் தர்ஸிலும் கலந்து கொண்டார். அத்துடன் மற்ற மக்களிடமிருந்தும் இவர் திருக்குர்ஆனைக் கற்று வந்தார்.

இறையச்சமுள்ள ஒருவருக்கு அல்லாஹ்வே திருக்குர்ஆனைக் கற்றுத் தருகின்றான். அவர்களுக்கு வழிகாட்டுகின்றான். திருக்குர்ஆனின் அறிவு மாஷா அல்லாஹ் அதிகமாக இருந்ததை சஹாபாக்களின் வாழ்க்கையில் நம்மால் பார்க்க முடிகின்றது.

முஸ்தகீம் சாஹிபின் மகன் கைருத்தீன் சாஹிப் அவர்களின் ஒரு அறிவிப்பு இருக்கின்றது. இவர் 1906 ஆம் ஆண்டு பைஅத் செய்தார். 1906 ஆம் ஆண்டு தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களைச் சந்திப்பதற்கான நல்வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருநாள் ஹுஸூர் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு அமர்ந்திருந்தார்கள். தற்செயலாக அந்த நாளில் பள்ளிவாசலில் வெளிச்சம் இல்லாமல் இருந்தது. ஹுஸூருக்கு பக்கத்தில் வேறு சிலரும் நானும் அமர்ந்திருந்தோம். ஒரு நபர் கேள்வி கேட்டார். ஹுஸூர்! ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் விலங்குகளைப் படைத்தார் என்று மவ்லவிகள் கூறுகின்றனர். இதைக் கேட்டதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஷேக் சாஹிப்! படைக்கின்றவனாக இறைவனும், ஈஸா (அலை) அவர்களும் இருக்க முடியுமா? இவ்வாறு ஒரு சொற்றொடரைத்தான் கூறினார்கள். அறிவிப்பு செய்தவர் எழுதுகின்றார்கள்:

எனக்கு அந்த ஷேக் சாஹிப் யார் என்று தெரியாது. ஏனென்றால், அப்போது இருட்டாக இருந்தது. ஆனால் ஷேக் சாஹிப் பிறகு எதுவுமே கூறவில்லை. ஹுஸூர் தாமாகவே மீண்டும் மவ்லவிகளிடம், இவ்வளவு சிறிய சொற்றொடரைத்தான் விவாதங்களின் போது நாம் பயன்படுத்த வேண்டும். நீண்ட விவாதங்கள் விஷயங்களை வேறு பக்கம் கொண்டு சென்று விடும் என்று கூறினார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் கைருத்தீன் சாஹிப் எழுதுகின்றார்கள்:

நான் எனது கிராமத்திற்குத் திரும்பிச் சென்று விட்டேன். எனக்கு திருக்குர்ஆன் படிக்க மிகுந்த ஆர்வம் இருந்தது. ஹுஸீர் ஒரு நாள் கனவில் என்னிடம் நீங்கள் காதியான் வாருங்கள். நாம் உங்களுக்கு திருக்குர்ஆனைக் கற்றுத் தருவோம் என்று கூறினார்கள்.

இந்தக் கனவைக் கண்ட சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத் ஆகியிருந்தார்கள்.

கூறினார்கள்: இதற்குப் பிறகு நான் இன்னொரு கனவு பார்த்தேன். கனவில் நான் ஹிஜ்ரத் செய்து வந்துள்ளேன். இப்போது முஹல்லா நாஸிராபாத் உருவாகியுள்ள அந்த இடத்திற்கு நான் வந்துள்ளேன்.

அதாவது ஹிஜ்ரத் செய்து அவர்கள் காதியான் வந்தார்கள். முஹல்லா நாஸிராபாத் இருக்கும் இடத்தில் வந்து இறங்கினார்கள்.

கூறுகின்றார்கள்: இந்த மைதானத்தில் நான் எனது பொருள்களை இறக்கிக் கொண்டிருந்தேன். இந்த இடத்தின் பெயர் என்ன? என்று நான் கேட்டேன். அப்போது வானத்திலிருந்து ஒரு குரல் ஒரு வடிவமாக வந்தது. அதன் வடிவமும் தோற்றமும் ஃபுட்பால் போன்று இருந்தது. அதிலிருந்து இந்த இடத்தின் பெயர் இப்ராஹீமின் காடு அங்கு தான் நீங்கள் உங்களது பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கின்றீர்கள் என்ற குரல் வந்தது.

இந்த எளியவனுக்கு அல்லாஹ், ஹஸ்ரத் சாஹிபின் பெயரை இப்ராஹீம் என்று கூறினான். அப்போது எனக்கு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள், நான் சில நேரங்களில் ஆதமாகவும், சில நேரங்களில் மூஸாவாகவும், சில நேரங்களில் யாகூப் ஆகவும் இருக்கின்றேன். மேலும் நான் இப்ராஹீமாகவும் இருக்கின்றேன். எனது சந்ததிகளை எண்ண முடியாது என்று கூறியது எனக்கு தெரியாமல் இருந்தது. அல்லாஹ் தனது குரல் மூலம்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இப்ராஹீம் என்ற பெயரும் இருக்கின்றது என்பதை தெரிவித்த போதுதான் எனக்கு அது தெரிய வந்தது என்று இவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ள விஷயங்கள், பெயர்கள், இல்ஹாம்கள் ஆகியவற்றிற்கு ஆதரவான அடையாளங்களை அவர்களது சஹாபாக்களுக்கு அல்லாஹ் காட்டினான்.

**கைருத்தீன் சாஹிப் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

நான் எனது பணிவின் காரணமாக இதைக் கூறவில்லை. மாறாக நான் கூறுவது உண்மையாகும். நான் பாவியாக இருந்தேன். இப்போது நான் கூறும் இந்த விஷயம் உறுதியாக! ஆம் உறுதியாக! நான் நபித்துவத்தின் ஒளியினாலேயே கூறுகின்றேன். என் தரப்பிலிருந்தும் இதை நான் கூறவில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

நான் இறைவனின் ஒளியாக இருக்கின்றேன். அதன் மூலமே பகல் வெளிப்பட்டது என்று கூறியுள்ளார்கள். எனவே, இது மிக உறுதியான விஷயமாகும். எவர் ஒளியுடன் தொடர்பை ஏற்படுத்துவாரோ அவருக்கு அந்த ஒளியிலிருந்து நிச்சயமாக பங்கு கிடைக்கும். இந்த விஷயமும் மிகவும் தெளிவாக இருக்கின்றது. அந்த ஒளி ஒவ்வொருவரது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்பவே கிடைக்கும்.

**ஹஸ்ரத் கைருத்தீன் சாஹிப் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

நமக்கு இல்ஹாம் என்று நாம் எதைக் கூறுகின்றோம்? கஷ்ஃப் என்று எதைக் கூறுகின்றோம்? உண்மையான கனவுகள் என்பது என்ன? என்பதெல்லாம் தெரியாமல் இருந்தது. இப்போது இறைவனின் அருளால் இந்த இறைவனால் அனுப்பப்பட்ட தூதருடைய கைகளில் எமது கைகளைக் கொடுத்ததால் நமக்கு இல்ஹாம் பற்றிய அறிவு மட்டும் கிடைக்கவில்லை. கஷ்ஃப் பற்றிய அறிவு மட்டும் கிடைக்கவில்லை. உண்மையான கனவுகள் பற்றிய அறிவு மட்டும் கிடைக்கவில்லை. மாறாக, இந்த மூன்றையும் நாங்கள் பெற்றுக் கொண்டோம்.

எனவே, இந்த புரட்சியைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் தொடர்பாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இதை நாம் பலமுறை கேட்டுள்ளோம். அவர்களிடம் ஒருவர் கேட்டார்.

ஹஸ்ரத் மவ்லவி சாஹிப்! நீங்கள் முதலிலேயே சிறந்த சான்றோராகத் திகழ்ந்தீர்கள். நீங்கள் மிர்ஸா சாஹிபிடம் பைஅத் செய்ததன் காரணமாக உங்களுக்கு என்ன கிடைத்தது? என்று கேட்டார்.

முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், பாருங்கள்! இன்னும் பல பலன்களும் எனக்கு இந்த பைஅத்தால் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்றைப் பற்றி உங்களுக்குக் கூறுகின்றேன். பைஅத் செய்வதற்கு முன்னால் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு வந்தேன். இப்போது எனது கண்கள் விழித்திருக்கும் நிலையில் கஷ்ஃப் காட்சியில் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சந்திக்கின்றேன். இந்தப் புரட்சியைத்தான் என்னிடம் மிர்ஸா சாஹிப் உருவாக்கியுள்ளார்கள் என்று பதில் கூறினார்கள்.

**ஹஸ்ரத் கைருத்தீன் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

இப்போது நான் கண்களால் கண்ட நிச்சய உறுதியின் விளைவாக இந்த விஷயங்களின் உண்மையை எங்களால் கூற முடியும்.

உதாரணமாக, நான் முபாரக் பள்ளிவாசலில் அமர்ந்தவாறு ளுஹர் நேரத்தில் இந்த இல்ஹாமைப் பெற்றேன்.

*உலாயிக ஹுமுல் முஃப்லிஹூன் - இந்த ஜமாஅத்தைச் சேர்ந்துள்ள மக்களே வெற்றி பெறக்கூடியவர்கள்* என்று இதில் கூறப்பட்டுள்ளது. எனவே நாங்கள் பார்க்கின்றோம். சாதாரண தகுதியுடைய மக்களாக நமக்கு தெரிபவர்களின் இறுதி முடிவு நல்லதாக அமைந்துள்ளது. அவர்களிடமிருந்து நல்ல நல்ல பணிகளும் நடக்கின்றன. அவர்களது துஆக்களில் ஒரு குறிப்பான தாக்கம் இருப்பது தெரிய வருகிறது. பிறகு ஒருமுறை நான் இவ்வாறு துஆ செய்தேன்.

அல்லாஹ்வே! உனது நெருக்கத்தைப் பெறுவதற்குரிய சிறந்த வழிமுறை எது? என்று கேட்டேன்.

பாருங்கள்! இந்த மக்களுக்கு எத்தகைய விருப்பங்கள் இருந்திருக்கின்றது. அல்லாஹ்வுடன் எத்தகைய தொடர்பு இருந்திருக்கின்றது. இந்த தொடர்பை வளர்த்துக் கொள்ள இவர்கள் எத்தகைய வழிமுறைகளைக் கையாண்டுள்ளனர்.

உனது நெருக்கத்தைப் பெறுவதற்குரிய வழிமுறை எது? என அல்லாஹ்விடம் துஆ செய்கின்றார்.

அவர் கூறுகின்றார்: இந்த எளியவனுக்கு அல்லாஹ் நமது நெருக்கத்தைப் பெறுவதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன. சந்தா கொடுங்கள் மற்றும் தப்லீக் செய்யுங்கள் என்று கூறினான்.

இந்த இரண்டு வழிமுறைகள் தான் நமக்கு பிடித்தமானது என்று அவருக்குப் பதில் கூறப்பட்டது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வே! நான் இந்த அளவு படிக்கவில்லை. பள்ளிவாசலில் அமர்ந்தவாறு இவர் அல்லாஹ்வுடன் பேசிக் கொண்டிருக்கின்றார்.

நான் கூறினேன்: அல்லாஹ்வே! நான் இந்த அளவு படித்தவன் அல்ல. நான் எப்படி தப்லீக் செய்ய வேண்டும்? என்று கேட்டேன்.

அதற்கு அல்லாஹ் திருக்குர்ஆனை நாம் உமக்கு கற்றுத் தந்து விட்டோம் என்று கூறினான்.

இந்தச் சொல்லை அல்லாஹ் கூறியதும் அந்த சமயத்தில்தான் எனக்கு *வமா ரமைத்த இஸ் ரமைத்த வலாகின்னல்லாஹ ரமா - நீர் எறிந்த போது நீர் எறியவில்லை; அல்லாஹ்தான்*

*எறிந்தான் (8:18)* என்ற இந்த வசனத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர்க்களத்தில் எறிந்த ஒரு பிடி மண் புயலாக மாறுவதற்குக் காரணமாக இருந்தது என்பதைப் பற்றி கூறுகின்றான். இந்த வசனம் தொடர்பான கருத்து எனக்கு இப்போதுதான் புரிய வந்தது என்று கூறுகின்றார்கள்.

**தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஏனென்றால், நான் எனது கிராமத்தில் இருந்த சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நான் கனவில் சந்தித்தேன். இந்தக் கனவை முதலிலேயே இவர் கூறி விட்டார். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர்களிடம், நீங்கள் காதியான் வாருங்கள். நாம் உங்களுக்கு திருக்குர்ஆனைக் கற்றுத் தருவோம் என்று கூறியிருந்தார்கள்.

இப்போது பாருங்கள். இந்த வாக்குறுதியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்திருந்தார்கள். ஆனால் பதில் கூறியது அல்லாஹ் ஆவான். நாம் உமக்கு திருக்குர்ஆனைக் கற்றுத் தந்து விட்டோம் என்பதே அந்த பதில்.

**அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த எளியவன் பார்க்கின்றேன். ஒவ்வொருவரது தகுதிக்கேற்ப இப்போது இறைவனின் அருளால் எவர் திருக்குர்ஆனைப் படிக்க விரும்புகின்றாரோ அவருக்கு என்னால் குர்ஆனைக் கற்றுக் கொடுக்க முடிகின்றது. இன்றைய நாட்களில் விருந்தினர் தங்கும் விடுதியில் காலையில் ஒரு மணி நேரம் அல்லது ஒன்றரை மணி நேரம் திருக்குர்ஆனை அதன் பொருளுடன் நான் கற்றுக் கொடுக்கின்றேன். இறைவன் நாம் உமக்கு திருக்குர்ஆனைக் கற்றுத் தந்து விட்டோம் என்று கூறியவாறு அத்துடன் நீங்கள் ஆது, ஸமூது கூட்டத்தாரின் வரலாற்றை திருக்குர்ஆனில் படிக்கவில்லையா? என்று கேட்டான். ஒரு ருகூவு ஓதிவிட்டு அதை மக்களுக்கு கூறினேன். அதாவது நபிமார்களுக்கு கீழ்படியாமல் இருப்பவர்களுக்கு என்ன நிலைமை ஏற்பட்டுள்ளது? என்பதைக் கூறினேன். இவ்வாறே துஆ தொடர்பாக இறைவன் என்னிடம் நீங்கள் நெய் அதிகமாக சாப்பிடுங்கள் என்று கூறினான். நெய் சாப்பிடுவது என்றால் என்ன? என்று நான் கேட்டேன். அதற்கு நான் இவ்வாறு கேட்டு மூன்று நாட்கள் கழிந்த பிறகு அல்லாஹ் நெய் சாப்பிடுவது என்பதன் பொருள் அதிகமாக துஆ செய்வதாகும் என்று கூறினான். இந்த சொற்றொடரை அவன் எனக்கு பஞ்சாபி மொழியில் கூறினான். அதாவது எந்த வீட்டில் துஆ செய்யப்படுகிறதோ அந்த வீடு மகிழ்ச்சியில் இருக்கும் என்று கூறினான். பிறகு எவரிடம் இறைவன் பேசுவதில்லையோ அவன் முஸ்லிம் அல்ல என்ற குரலும் கேட்டது.

எனவே, நாமும் மகிழ்ச்சியில் திளைத்திருக்க வேண்டும் என்றால் நமது வீடுகளை துஆக்களால் நிரப்ப வேண்டும்.

**தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்:**

என்னைப் போன்ற மனிதன் இவை எல்லாம் எனது ஆற்றலால் கிடைத்தது என்று வாதம் செய்ய முடியுமா? இது நபித்துவ ஒளியிலிருந்துதான் கிடைத்துள்ளது என்பது தெளிவாக தெரிந்து விடும். எனவே நான் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த சொற்றொடரை மீண்டும் கூறிவிடுகின்றேன். அவர்கள் கூறுகின்றார்கள்:

“நான் விண்ணிலிருந்து சரியான நேரத்தில் இறங்கியுள்ள தண்ணீராக இருக்கின்றேன். பகல் வெளிப்படுவதற்குக் காரணமாக இருந்த அந்த இறைவனின் ஒளியாக நான் இருக்கின்றேன்.”

ஹஸ்ரத் ஹாஃபிஸ் கய்யூம் பக்ஸ் சாஹிபின் மகன் ஹஸ்ரத் ஹாஃபிஸ் நபி பக்ஸ் சாஹிப். இவர் பைஸலா செக் என்ற இடத்தில் வாழ்ந்து வந்தவராவார். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாதத்திற்கு முன்பே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்தித்திருந்தார்கள். இவர்

ஆரம்ப காலத்தில் பைஅத் செய்திருந்தார். ஆப்பிரிக்காவில் முபல்லிக் ஆக இருந்த மவ்லவி ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் ஹாஃபிஸ் சாஹிபின் மகனாவார்கள். அவர்கள் எழுதுகின்றார்கள்:

எனது தந்தையார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது பேரன்பு வைத்திருந்தார்கள். அவரது இயல்பில் எந்த அளவு முன்னெச்சரிக்கையாக செயல்படும் நிலை இருந்தது என்றால், எப்போதெல்லாம் யாராவது அவர்களிடம் ஹுஸுர் (அலை) அவர்கள் பற்றிய விஷயங்களைக் கூறுமாறு கூறினாலும் எனக்கு எனது நினைவாற்றல் மீது நம்பிக்கை இல்லை என்றே பதில் கூறுவார்கள். தவறான விஷயத்தை ஹுஸுருடன் தொடர்புபடுத்தி நான் கூறாமல் இருக்க வேண்டும். அவர் நதி நீர்த்துறையில் நிலத்தை அளப்பவராக பணிபுரிந்து வந்தார். தண்ணீர் சுழற்சி இருக்கும் சமயங்களில் முழு நாளும் அவருக்கு தனது பணி நிமித்தமாக சுற்றி வர வேண்டியது வரும். கடுமையான வெயில் இருக்கும் மே, ஜுன் மாதங்களிலும் இவ்வாறு சுற்றி வர வேண்டியது வரும். இதனால் மனிதனுக்கு எந்த அளவு சோர்வு ஏற்படும் என்பது மிகவும் தெளிவான விஷயமாகும். ஆனால் இவ்வாறிருந்தும் இரவு நேரத்தில் அவர்கள் தஹஜ்ஜுது தொழுவதற்காக கண்டிப்பாக எழுந்து விடுவார்கள். எங்களுக்கும் இந்த விஷயத்தை அதிகமாக வலியுறுத்திக் கூறுவார்கள். அதாவது, பிள்ளைகளுக்கும் அது பற்றி கூறி வந்தார்கள்.

ரமலானின் நாட்களில் கடுமையான வெப்பம் இருந்தும் கூட முறையாக அவர்கள் நோன்பு நோற்பார்கள். குளிர் காலத்தில் தஹஜ்ஜுத் தொழுகையை தொழுதவாறு பொதுவாக உரத்த குரலில் கிராஅத்தை ஓதியவாறு, பிள்ளைகளையும் தொழுகையில் தம்முடன் சேர்த்துக் கொள்வார்கள். அவர்கள் இறைவனின் அருளால் திருக்குர்ஆன் ஹாஃபிஸாக இருந்தார்கள்.

எங்களுக்கு தொழுகை, நோன்பு ஆகியவை தொடர்பாக மிகவும் வலியுறுத்திக் கூறி வந்தார்கள். அதைக் கண்டிப்புடன் கண்காணித்து வந்தார்கள். இதுவே பெற்றோர்களின் பணியாகும். சோம்பேறித்தனத்தை வெளிப்படுத்தினால் மிகவும் வெறுப்படைவார்கள். திருக்குர்ஆனை தானே முன் வந்து எங்களுக்கு கற்றுத் தந்தார்கள். பகல் நேரங்களில் தனது பணிகளில் மூழ்கியிருப்பதன் காரணமாக அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை என்றால் இரவில் அதை கற்றுத் தருவார்கள். நாங்கள் மூன்று சகோதரர்கள் இருந்தோம். எங்களில் மூத்தவரான அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் காதியானில் கல்வி கற்கும் போது 1907 ஆம் ஆண்டு வஃபாத் ஆனார்கள். எனக்கும் ஹபீபுர் ரஹ்மான் B.A. அவர்களுக்கும் எங்களது தந்தையார் எங்களுக்கு 12 அல்லது 13 வயது ஆகும்போதே பைஸுல்லா செக்கைச் சார்ந்த ஹாஃபிஸ் நூர் முஹம்மது சாஹிப் அவர்களுடன் மர்ஹூம் ஹாஃபிஸ் ஹாமிது அலி சாஹிப் (ரலி) அவர்களும் சேர்ந்து ஹுஸுர் பராஹீனே அஹ்மதிய்யாவை எழுதிக் கொண்டிருந்த சமயத்தில் ஹுஸுர் அவர்களிடம் முதன் முறையாக வந்தார்கள். இதற்குப் பிறகு பலமுறை வந்து ஹுஸுர் அவர்களைச் சந்தித்தார்கள். மிக விரைவில் இவர்கள் பைஅத்தும் செய்து விட்டார்கள். ஏனென்றால், அவர்கள் அதாவது இவர்களது தந்தையார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அவர்களது வாதத்திற்கு முன்னரே பைஅத் பற்றி கூறி வந்தார்கள். அவர்கள் பைஅத் செய்த வருடம் பற்றி எனக்கு தெரியாது. ஆனால் முதலில் ஹுஸுர் அவர்களை சந்தித்த பிறகு அவர் ஹுஸுருடைய ஆளாகவே மாறி விட்டார்கள்.

**பிறகு எழுதுகின்றார்கள்:**

எனக்கு அவர்கள் காதியானிலேயே கல்வி கற்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். மியான் ஹகீம் ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிபிற்கு காதியானில் கல்வி கற்பதற்கான ஏற்பாட்டை செய்தார்கள். அவர்கள் துக்கம் ஏற்படும் சமயங்களில் இறைவனது திருப்தியில், திருப்தி அடைவதில் மிகவும் உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள்.

**ஹகீம் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

எங்களது மூத்த சகோதரர் 1907 ஆம் ஆண்டு வஃபாத் ஆன சமயத்தில் எங்களது இரண்டு மூத்த சகோதரிகளின் திருமண நாட்கள் மிக அருகில் இருந்தது. இந்த நோக்கத்திற்காக தந்தையார் வேலை பார்த்து வந்த இடத்திலிருந்து நாங்கள் எல்லாரும் எங்களது சொந்த ஊரான பைஸுல்லா செக் சென்றிருந்தோம். ஒரு சகோதரியின் திருமணத்தின்போது மாப்பிளை வீட்டைச் சார்ந்தவர்கள் ஜலந்தரிலிருந்து வந்திருந்தனர். அவர்கள் வருவதற்கு மூன்று நாட்கள் மட்டும் இருந்த சமயத்தில்தான் எங்களது சகோதரரான அப்துர் ரஹ்மான் சாஹிபிற்கு கல்லீரலில் கட்டி வந்ததன் காரணமாக நோய்வாய்ப்பட்டு காதியானில் அவர்கள் வஃபாத் ஆகி இருந்தார்கள். மாப்பிள்ளை வீட்டார் இந்த விஷயத்தை கேள்விப்பட்டதும் நாங்கள் திருமண தேதியை கொஞ்சம் தள்ளிப் போடலாம் என்று கூறினார்கள். அவர்களாகவே தந்தி மூலம் இந்த கோரிக்கையை தெரிவித்திருந்தார்கள். ஆனால் ஹகீம் சாஹிபின் தந்தையார் கூறினார்கள்.

வஃபாத் இறைவனின் ஒரு தீர்ப்பாகும். அது நடந்து விட்டது. மாப்பிள்ளை வீட்டாருடன் நீங்கள் குறிப்பிட்ட நேரத்தில் இங்கு வந்து சேருங்கள். பெண்ணை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லவும். ருஹ்ஸதானா நடக்கும் என்று கூறிவிட்டார்கள்.

தனது பிரியமான மகன் வஃபாத் ஆகி மூன்று நாட்களே கழிந்த நிலையில் தனது இரு மகள்களுக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். மார்க்கப் பற்றுள்ள ஒரு நபருக்கு இதுபோன்ற தருணங்கள் மிகப்பெரும் சோதனையாக அமைந்து விடுகிறது.

**பிறகு எழுதுகின்றார்கள்:**

முதல் கிலாஃபத், இரண்டாவது கிலாஃபத் ஆகிய இரு காலக்கட்டங்களிலும் அவர்களுக்கு ஒருபோதும் எந்த சோதனையும் வரவில்லை. அவ்வாறே இரு கலீஃபாக்களிடம் பைஅத் செய்வதிலும் அவர்கள் எவ்வித தயக்கத்தையும் வெளிப்படுத்தியதில்லை. கிலாஃபத்தை ஏற்றுக் கொள்வதில் எத்தகைய உயர்வான முன்மாதிரியைக் காட்டினார்கள் என்றால் நான் இரண்டு முறை தப்லீகிற்காக மேற்கு ஆப்பிரிக்காவிற்கு வந்துள்ளேன். ஹகீம் ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் ஆப்பிரிக்காவில் ஒரு நீண்ட காலகட்டம் முபல்லிக் ஆக இருந்துள்ளார்கள்.

**அவர்கள் கூறுகின்றார்கள்:**

முதல் முறையாக நான் 8 வருடங்கள் தொடர்ச்சியாக அங்கு இருந்த சமயத்திலும் இப்போது இரண்டாவது முறையாக 7 வருடங்கள் தொடர்ச்சியாக இருந்து விட்டேன். பல நிலைமைகளைக் கடந்து வந்த பிறகும் கூட உலகப் பொருள்களைப் பொருத்தவரையில் அவர்களுக்கு இதனால் மிகப்பெரிய உதவியும் ஆதரவும் கிடைத்திருக்கும். ஆனால் எனது தந்தையார் எப்போதும் நான் ஒருபோதும் எவ்வகையிலான பொறுமையின்மையையும் வெளிப்படுத்திக் காட்டக் கூடாது என்றே எனக்கு அறிவுரை கூறி வந்தார்கள். எப்போது கலீஃபத்துல் மஸீஹ் திரும்பி வருமாறு கட்டளையிடுவார்களோ அப்போதுதான் திரும்பி வர வேண்டும் என்று கூறி இருந்தார்கள். சுயமாக நீங்கள் எதுவும் கூறக்கூடாது. எந்த கோரிக்கையும் வைக்கக் கூடாது என்று கூறியிருந்தார்கள். அவர்கள் வேலை பார்த்த காலக்கட்டத்தில் அவர்கள் ஜமாஅத்தின் எல்லா பத்திரிகைகளையும் வாங்கி வந்தார்கள். முறையாக சந்தா செலுத்தி வந்தார்கள். ஏழைகளுக்கு அதிகமாக உதவுவார்கள். மிகச் சிறந்த முறையில் விருந்தோம்பல் செய்து வந்தார்கள். அவர்கள் பைஅத் செய்திருந்தார்கள். வேலை பார்த்த சமயத்தில் வஸிய்யத் சந்தாவைக் கொடுத்து வந்தார்கள். அவர்களது நிலம் பைஸலா செக்கில் உள்ளது. அதற்குரிய வஸிய்யத்தையும் அவர்கள் செய்துள்ளார்கள்.

இவர்களது கொள்ளுப் பேரரான மலிக் அப்துர் ரஹீம் சாஹிப் அவர்களின் மகனான உமைர் அவர்களுக்கு லாஹுரிலுள்ள மாடல் டவுணில் உள்ள பள்ளிவாசலில் மே 28ம் தேதி ஷஹீதாகுகின்ற உயர்

தகுதியையும் அல்லாஹ் வழங்கியுள்ளான். இவருக்கு மிகச் சிறிய இரண்டு குழந்தைகள் உள்ளனர். அல்லாஹ் இவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. இளைஞர்களாக இருந்த நிலையில் ஷஹீதான ஷஹீதுகளின் பிள்ளைகளுக்காகவும், அவர்களது மனைவிமார்கள் விதவைகளாக இருக்கின்றனர் இவர்களுக்காகவும் நாம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் இவர்களது பெற்றோர்களுக்கு உதவியாளனாகவும் பாதுகாவலனாகவும் இருப்பானாக. பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. இளம் வயதில் இருக்கும் விதவைகளுக்கு நல்ல வரன் அமைவதற்குரிய வழிவகையை அல்லாஹ் செய்வானாக.

மியான் சிராஜுத்தீன் சாஹிப் அவர்களின் மகனாக முஹம்மது யாகூப் சாஹிப். இவர் 1900 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார். 1904 ஆம் ஆண்டு இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்தார்கள். இவர்கள் எழுதுகின்றார்கள்.

குழந்தைகளுக்கு தனது பரிவு காட்டும் மடியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதிக இடத்தை வழங்கி வந்தார்கள். இந்த அடியான் ஹுஸுர் அவர்களின் மடியில் விளையாடிக் கொண்டிருந்தான். ஒளி நிறைந்த ஹுஸுர் அவர்களின் முகம் நூருன் அலா நூர் ஒளிமேல் ஒளியாக இருந்தது. எங்களுக்கு சிறு வயதில் ஹஸ்ரத் சாஹிப் எங்களிடம் எங்களது தாய் தந்தையரை விட எங்களை அதிகமாக நேசிப்பது போன்று தெரிந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லாஹூர் செல்லும் போதெல்லாம் ஹுஸுர் அவர்கள் எங்களது வீட்டிற்கு வந்து அதன் பொலிவிற்கு பெருமை சேர்த்தவர்களாக இருந்தார்கள். ஒருமுறை ஹுஸுர் வெளியில் சென்ற சமயத்தில் முற்றிலும் அடைக்கப்பட்ட நிலையிலிருந்த ஒரு வண்டியில் தான் சென்றார்கள். அவர்கள் திரும்பி வந்த சமயத்தில் எங்களது குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர்கள் மர்ஹூம் சிராஜுத்தீன் சாஹிப், எங்களது சச்சா மியான் தாஜுத்தீன் சாஹிபும் ஏனைய குடும்ப நண்பர்களும் ஹுஸுரின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். எங்களது வீட்டிற்கு முன்னால் அரசாங்க தோட்டம் இருந்தது. தோட்டமுள்ள ரோடு எங்கள் வீட்டுடன் ஒட்டியிருந்தது. அந்தத் தோட்டத்தின் வாசல் அருகில் தீய குண்டர்களின் பெருங்கூட்டம் இருந்தது. ஹுஸுர் (அலை) அவர்கள் வந்த போது அவர்கள் மாடிப்படிகளில் ஏறி வீட்டிற்குள் வந்தார்கள். அப்போது தீய குண்டர்கள் கல்லெறிய ஆரம்பித்தார்கள். எனது தந்தையாரும் சாச்சாவும் இதை எப்படி தடுத்து நிறுத்தலாம் என்று ஆலோசனை செய்தனர். தந்தையார் எனக்காக ஒரு ஊழியரை நியமித்திருந்தார்கள். நான் அப்போது சிறு குழந்தையாக இருந்தேன். தந்தையின் ஊழியரிடம் என்னை தூக்குமாறு கட்டளையிட்டார்கள். அப்போது இந்த எளியவன் சிறிது நோய்வாய்ப்பட்டும் இருந்தேன். ஊழியர் என்னைத் தூக்கியவாறு இந்தக் கும்பலை எதிர்த்து தைரியத்துடன் போராடினார்கள். இவ்வாறு எதிர்த்துப் போராடிய பிறகு கும்பல் கலைந்து சென்று விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இவர்களைப் போக விட்டு விடுங்கள் என்று கூறினார்கள்.

**இவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஒருமுறை நான் எனது தந்தையாருடன் இருந்தேன். ஹுஸுர் (அலை) அவர்கள் எங்கள் வீட்டில் தங்கினார்கள். அவர்கள் செல்லும் சமயத்தில் ஓரிடத்தில் தாளும், பேனாவும், மைக்கூடும் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஹுஸுர் ஏதோ எழுதினார்கள். தந்தையார் தனது மகளுக்குப் பெயர் வைக்கும்படி கூறினார்கள். ஹுஸுர் அம்னா பேகம் என்று பெயர் வைத்தார்கள்.

பிறகு இவர்களின் இன்னொரு அறிவிப்பும் உள்ளது. நான் எப்போதெல்லாம் எனது தந்தையாருடன் காதியான் வருவேனோ அப்போதெல்லாம் எனது சிறு வயது வழக்கத்திற்கேற்ப ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது கிளினிக்கிற்குச் சென்று விடுவேன். அங்கு அவர்கள் மருத்துவம் பார்த்து வந்தார்கள்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் என்னை தனது மடியில் அமர்த்திக் கொள்வார்கள். எங்களிடம் அன்பு காட்டுவார்கள். பெரும்பாலும் அவர்கள் திருக்குர்ஆனை ஓதுவார்கள்.

குழந்தைகளுக்கு திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பார்கள். நோயாளிகள் எவரும் இல்லாமல் இருந்தால் பிள்ளைகளை மடியில் அமர்த்தியவாறு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனை ஓதுவார்கள். இங்கிருந்து எழுந்து, நான் மஸ்ஜிது முபாரக்கிற்குச் சென்றால் அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். ஹுஸுர் என்னை அருகில் அமர வைத்து சில விஷயங்களை என்னிடம் கேட்பார்கள். அப்போது சில விருந்தாளிகளின் வருகையால் மஸ்ஜிது முபாரக் பொலிவுடன் காணப்பட்டது. காதியான் அப்போது மிகச்சிறிய ஊராக இருந்தது. ஹுஸுர் அவர்களின் இல்ஹாம் அவர்கள் கூறிய விதத்தில் நிறைவேறும் என்று எவருமே நம்பிக்கை வைத்திருக்க முடியாத நிலை இருந்தது. எனது தந்தையார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள். அவர்களது பழைய ஊழியர்களில் ஒருவராக அன்னார் இருந்தார்கள்.

**தந்தையார் எங்களிடம் கூறினார்கள்:**

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இறைவனது உதவி மற்றும் வெற்றி தொடர்பாக கூறிய பல விஷயங்களையும் அவை நிறைவேறுவதைக் கண்டுள்ளோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீதிருந்த நிச்சய உறுதியின் காரணமாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறிய இல்ஹாம்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இருந்தது. பிறகு அவை நிறைவேறுவதையும் நாங்கள் கண்டோம்.

எனவே, இந்த சஹாபாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து தூய மாற்றங்களை தங்களிடம் உருவாக்கி இறைவனுடன் தங்களது தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீது ஈமான் கொள்வதில் எந்த அளவு உறுதிமிக்கவர்களாக இருந்தனர் என்றால் முஸ்லிம்களில் எவராலும் இவர்களை, அவர்களது இடங்களிலிருந்து அசைக்க முடியவில்லை. இவர்களுக்கு மார்க்கத்தின் மீதிருந்த தன்மான உணர்வு இஸ்லாத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களின் நினைவைப் புதுப்பிக்கக்கூடியதாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறியுள்ள இந்தக் கூற்றின் மீது அதாவது, இறைவன் இந்த இயக்கத்தை ஏற்படுத்திய சமயத்தில் அதற்கு ஆதரவாக நூற்றுக்கணக்கான அடையாளங்களை அவன் வெளிப்படுத்தியுள்ளான். இதன் மூலம் இந்த ஜமாஅத் சஹாபாக்களின் ஜமாஅத்தாக வேண்டும் என்றும், அந்த சிறந்த காலம் மீண்டும் திரும்ப வேண்டும் என்பதுதான் அவனது நோக்கமாகும். எவர்கள் ஜமாஅத்தில் இணைகின்றார்களோ அவர்கள் இதுவரை அவர்களைச் சேராத மற்ற பிரிவினர்களாக இருப்பதால் அவர்கள் தங்களது கடந்தகால போலித் தோற்றங்களைக் கைவிட்டு விட்டு எப்போதும் இறைவன் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

இந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சொற்களை சஹாபாக்கள் உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டார்கள். மேலும் அவர்களது இந்த போதனையையும் விருப்பத்தையும் அவர்கள் நிறைவேற்றிக் காட்டினார்கள். நாமும் நம்மிடம் தூய மாற்றங்களை ஏற்படுத்தியவாறு அவற்றைத் தொடர்ந்து நிலைபெறச் செய்யும் நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! இன்ஷா அல்லாஹ் நாளை மறுநாளிலிருந்து, இன்னும் சொல்வதென்றால் நாளை இரவு 12.00 மணியிலிருந்து புது வருடமும் ஆரம்பமாகிறது. அல்லாஹ் இந்த வருடத்தையும் ஜமாஅத்திற்காக முன்பை விட அதிகமாக பரக்கத்துகளைக் கொண்டு வருகின்ற வருடமாக ஆக்குவானாக! அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் கைகளை அல்லாஹ் தடுத்து நிறுத்துவானாக! இவர்கள் உண்மையை அடையாளம் கண்டு கொள்வதற்கான நல்வாய்ப்பை உருவாக்குவானாக! அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் தனிப்பட்ட அளவிலும், ஜமாஅத் அளவிலும் அளவற்ற பரக்கத்துகளை இறக்கிக் கொண்டே இருப்பானாக! ஆமீன்.

தொழுகைக்குப் பிறகு இன்று நான் ஒரு ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். அது பாகிஸ்தான் சதர் அஞ்சமன் அஹ்மதிய்யாவின் ஆடிட்டர் மதிப்பிற்குரிய ஜமாலுத்தீன் சாஹிப் உடையதாகும். மதிப்பிற்குரிய

ஜமாலுத்தீன் சாஹிப் 1938 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் தேதி காதியானில் பிறந்தார்கள். அவர்கள் பிறப்பால் அஹ்மதி ஆவார்கள். 18 வயதில் ஜமாஅத்திற்கு இவர்கள் தொண்டு செய்ய ஆரம்பித்தார்கள். 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் தேதி தமது 73 வது வயதில் இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவர்கள் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். ரப்வாவிலுள்ள பெஹஸ்தி மக்பராவில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது. ஏறக்குறைய 55 வருடங்கள் அல்லாஹ் இவருக்கு ஜமாஅத்திற்காக தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு அலுவலகங்களில் இவர்கள் பணியாற்றியுள்ளார்கள். நிஸாமே ஜாயிதாத், வஸிய்யத் அலுவலகம், தாருஸ் ஸியாவத் தனிச்செயலர் அலுவலகம், நஸாரத் கித்மதே தர்வேஷான் ஆகிய அலுவலகங்களில் பணியாற்றியுள்ளார்கள். பிறகு அவர்கள் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஆடிட்டர் ஆக 2003 ஆம் ஆண்டு ஜுலை மாதம் நியமிக்கப்பட்டார்கள். வஃபாத் ஆகும் சமயம் வரை இதே பொறுப்பில் தனது தொண்டுகளை நிறைவேற்றி வந்தார்கள்.

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2009 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை முஹாஸிப் பிராவிடண்ட் ஃபண்ட் -ன் தற்காலிக அலுவலக அதிகாரியாக தொண்டாற்றி வந்தார்கள். அமைதியாக இருக்கும் இயல்பை உடையவர். மிகுந்த அன்புடன் வாழ்ந்தவர். ஒவ்வொருவருடனும் அனுதாபத்துடனும் அன்புடனும் நடந்து கொள்வார்கள். நெருங்கிய உறவினர்கள், மனைவி மக்களுடன் எப்போதும் அன்புடனும் நேசத்துடனும் நல்ல முறையில் பரிமாறுவார்கள். இறைவனது அருளால் மிகச் சிறந்த வீரராகவும் தைரியமிக்கவராகவும் இவர் இருந்தார். தொழுகைகள், நோன்பு ஆகியவற்றைப் பேணுபவராகவும், தஹஜ்ஜுது தொழக் கூடியவராகவும் இருந்தார். இவருக்கு கிலாஃபத்தின் மீது அளவு கடந்த பேரன்பு இருந்தது. அல்லாஹ்வின் அருளால் தனது செயல்களில் திறம்பட செயல்படக்கூடியவராக இருந்தார். அதில் ஒருபோதும் சோம்பேறித்தனம் காட்டவில்லை. ஜமாஅத் பணிகளுக்கு தனது சொந்தப் பணிகளை விட எப்போதும் முன்னுரிமை வழங்கி வந்தார். உண்மையான அர்ப்பணிக்கும் மனப்பான்மையுடன் இவர் பணி செய்து வந்தார். மிகுந்த பணிவுடன் தனது பணிகளை செய்து வந்தார். தனக்கு மேலுள்ள அதிகாரிகளுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பவராக இருந்தார்.

அல்லாஹ் இவர்களது தகுதியை உயர்த்துவானாக! மன்னிக்கும் தன்மையுடனும், கருணையுடனும் இவர்களுடன் பரிமாறுவானாக! இவர்களது பிள்ளைகளுக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக! இவருடைய மனைவி முன்பே வஃபாத் ஆகி விட்டார்கள். இவரது நன்மைகளை இவரது பிள்ளைகள் தொடர்ந்து செய்து வருவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 30.12.2011**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456